DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code Criminal Procedure)

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM

Calendar

Miscellaneous

Preliminary Register **CC 96/2015** **ALGSC காவல் நிலையம், நாகப்பட்டினம்**

Sessions

Deposition of witness for : ( PW 1- LW- 2)

Name : தர்மராஜ்

Village /Taluk :

Fathers Name

or Husband Name:

Caste /Religion :

Age /Calling :

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **20.03.2024**

**( 1வது மற்றும் 2 வது எதிரி ஆஜர் . 3 வது எதிரி ஆஜர் இல்லை. சட்டப்பிரிவு 317 கு.வி.மு.ச வின் கீழான மனுவானது அனுமதிக்கப்பட்டது, 5 வது எதிரி ஆஜரின்மை அனுமதிக்கப்பட்டுள்ளது( presence dispensed for 5th Accused) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

<u>சாட்சியானவர் மனுவின் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் பொதுவான குறுக்கு விசாரணை</u>

எனது பெற்றோருக்கு இரண்டு மகன் மற்றும் இரண்டு மகள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தாமரை செல்வி என்பவர் எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். மற்றொரு சகோதரி கோயம்புத்தூரில் செட்டில் ஆகிவிட்டார் என்றால் சரிதான். எனது சகோதரர் மனோகர் ராஜ் என்பவர் வெளி நாட்டில் வேலை பார்த்து விட்டு, தற்போது சென்னையில்செட்டில் ஆகி விட்டார் என்றால் சரிதான். எனது மனைவி ADJ தர்மாம்பாள் கல்லூரியில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். நான் நிரந்தரமாக நாகப்பட்டினம் காரம்பாடி என்ற பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தாமரை செல்வி என்பவர் வேளாங்கண்ணியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பூர்வீகம் வேளாங்கண்ணி என்று சொன்னால் சரிதான்.

ஆஜர் எதிரி தாமரைசெல்வி என்பவருக்கு திருமணம் நடைபெற்று திருமண வாழ்க்கை சரியாக அமையவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாக எனது பெற்றோர்கள் ஆஜர் எதிரி தாமரைசெல்வி என்பவருடன் வசித்து வந்தார்கள் என்றால், ஆஜர் எதிரி தாமரைசெல்வி என்பவர் தான் எனது பெற்றோருடன் வசித்து வந்தார். ஆஜர் எதிரி மற்றும் எனது தாயார் தற்போது ஒன்றாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் எனது அண்ணனுக்கு சொந்தமான வீட்டில் வசித்து வருகிறார்கள். மேற்படி வீடானது ஆஜர் எதிரி தாமரைசெல்வி என்பவருக்கு சொந்தமான வீடு என்று சொன்னால் சரியல்ல.

கடந்த 17.08.2011 தேதியன்று எங்களது தந்தை அவரது பிள்ளைகளான எங்கள் நால்வருக்கு உயிலினை எழுதி வைத்து பதிவு செய்திருந்தார்என்றால் சரிதான். மேற்படி உயிலானது எனது தந்தையும் வாழ்நாளுக்கு பின்னே அமலுக்கு வரகூடியது என்ற காரணத்தினால், ஆஜர் எதிரி தாமரைச்செல்வி என்பவருக்கு திருமண வாழ்க்கை சரியாக அமைந்திராத காரணத்தினால், உடனடியாக அனுகூலம் செய்யவேண்டி கடந்த 21.02.2013 தேதியன்று ஆஜர் எதிரி தாமரைச்செல்வி என்பவருக்கு சுயவிருப்பத்தொடர் சட்டத்திற்கு உட்பட்டு செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்று ஏற்படுத்தி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதினம் ஆஜர் எதிரி தாமரைச்செல்வி என்பவர் வசம் அளிக்கப்பட்டது என்றாலும், மேற்படி சுவாதினத்தின் அடிப்படையில் எதிரி தாமரைசெல்வி மேற்படி சொத்தின் பட்டாவினை அவரது பெயருக்கு மாற்றி அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமானது சட்டத்திற்கு புறம்பாக எனது தந்தையிடமிருந்து எழுதி வாங்கப்பட்டது. எதிரிகள் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு , மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை பெற்று இருக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து எனது தந்தை உரிமையியல் வழக்கோ அல்லது சட்ட நடவடிக்கையோ தொடர்ந்துள்ளாரா என்றால் அவ்வாறு ஏதும் தொடர வில்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட பின்பு பல வகையில் நான் ஆஜர் எதிரி தாமரைச்செல்வி என்பவரது சொத்தினை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டதாக எனக்கு எதிராக ஆஜர் எதிரி தாமரைச்செல்வி என்பவர் கடந்த 10.04.2013 தேதியன்று வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்என்றால் சரியல்ல.

இவ்வழக்கின் புகார் மனுவானது எனது தந்தையார் அளிக்கப்படவில்லை என்றாலும், புகார் மனுவில் எனது தந்தையின் கையொப்பத்தினை நாங்களாகவே மோசடியாக செய்து புகார் மனுவினை அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. அரசு தரப்பில் சொல்லியவாறு எதிரிகள் எவ்விதமான குற்ற செயலிலும் ஈடுப்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை ஏதும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.